5th August 1966]

தோண்டப்படவில்லை. எனினும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஊற்றுக் கிணறுகள் திட்டத்தின் கீழ் தோண்டப்பட்ட ஊற்று நீர்க் கிணறுகளும், சி. முட்லூர் கிராமத்தில் ஆற்று நீர் இறைக்கும் திட்டத்தின் கீழ்த் தோண்டப்பட்ட ஒரு கிணறும், பொதுப் பாசனக் கிணறுகளின் நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றன.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : *தலைவர் அவர்களே, பொதுக் கிணறு, இதற்கு முன்பு சில அங்கத்தினர்கள் கூட 'கம்யூனிட்டி வெல்' என்று அறிமுகப்படுத்தினார்கள், வெட்டுவது பெரிய விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்குமா? அல்லது சிறு விவசாயி களுக்குச் சாதகமாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.*

கனம் திரு. பூ. கக்கன் : *பொதுக் கிணறு வெட்டினால் அதைச் சுற்றி நிலங்கள் யார் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் சாதகம் அடைவார்கள்.*

Banana and Fruit Research Stations

* 117 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) Whether there is any proposal to set up new Banana Research Stations and Fruit Research Stations in the State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. பூ. கக்கன் : *(அ) இல்லை.*

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Committee on Agricultural production

* 118 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) the particulars of recommendations made by the Committee on Agricultural production under the Chairmanship of Sri S. Viswanathan, Member, Board of Revenue; and

(*b*) the decisions so far taken thereon?

கனம் திரு. பூ. கக்கன் : *(அ) & (இ) வேளாண்மை உற்பத்திக் குழு 161 பரிவுரைகள் செய்துள்ளது. அக் குழுவின் அறிக்கை நகல்கள் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அந்த அறிக்கையில் 257—299 பக்கங்களில் இப்பரிவுரைகளின் சுருக்கம் ஒன்று தரப்பட்டுள்ளது. இதுவரை 29 பரிவுரைகளின் மேல் அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது. இது மேற்படி சுருக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எஞ்சிய பரிவுரைகளை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.*

திரு. வை. சங்கரன் : *சார், அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ள பரிவுரைகளில் முக்கியமானவற்றைக் குறிப்பிட முடியுமா?*